## தேசிய விளையாட்டுக்கள் நிதியம் - 2014

---

தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் அதிகாரச்சட்டத்தின் 25(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும். கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 2,611,398 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி மற்றும் மீளாய்வாண்டின் மிகை என்பன அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது விளையாட்டு நிதியத்திற்கு கிடைத்த மானியங்களில் ரூபா 15,000,000 தொகை விசேட முற்பணக் கணக்கிற்கு செலவு வைத்த காரணத்தினால் விசேட முற்பணக் கணக்கில் காணப்பட்ட ரூபா 15,000,000 ஆன மீதி பூச்சியமாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் மிகை அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் முதலீட்டு மீதி ரூபா 169,288,291 ஆக இருந்த போதிலும், மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் அம்மீதி ரூபா 169,002,530 ஆக இருந்தமையால் ரூபா 285,761 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்குகளில் காண்பிக்கப்பட்ட பின்வரும் விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளவோ சான்றுறுதிப்படுத்தவோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய விளையாட்டு விழாவின் வெற்றியாளர்களுக்கு பரிசுப் பணம் | 5,691,500 | பரிசுப் பணம் பெற்றுக் கொள்வோரின் விபரங்கள் |
| (ஆ) | கிரிக்கெட் போட்டிகளுக்கான செலவினம் | 347,600 | பற்றுச்சீட்டுக்கள் மற்றும் செலவின அறிக்கைகள் |
| (இ) | 5 ரோயல் சிட்டி இலங்கை நூல்கள் கொள்வனவு | 45,000 | பொருள் பெறுவனவு மற்றும் விநியோகத்திற்குரிய பதிவேடுகள் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பொது நலவாய நாடுகளின் மாநாட்டிற்கு 100 விளையாட்டு புத்தகங்கள் கொள்வனவு | 1,128,234 | பொருள் பெறுவனவு மற்றும் விநியோகத்திற்குரிய பதிவேடுகள் |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1973 இன் 25 ஆம் இலக்க தேசிய விளையாட்டுக்கள் அதிகாரச் சட்டம் | |
| | (i) 4 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் நடைபெற்ற தேசிய விளையாட்டுக்கள் சபையின் கூட்டங்களுக்கு சமூகமளித்தமைக்காக அதன் உறுப்பினர்களுக்கு படிகளாக ரூபா 98,000 தொகை அதிகாரச்சட்டத்திற்கு முரணாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | (ii) 25(2) ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டு முடிவுற்ற பின் இயலுமான விரைவில் நிதியத்தின் நிர்வாகம் தொடர்பான அறிக்கையொன்று அமைச்சுச் செயலாளரால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571(3) | காலாவதியான வைப்புக்கள் உரிய வருமானக் கணக்கிற்கு அல்லது அரசின் வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 789,136 ஆன காசோலைகள் வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2008 ஏப்ரல் 24 ஆம் திகதிய 431 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | வெளிநாட்டுப் பயணத்திற்காக விமானப் பயணச்சீட்டுக் கொள்வனவு ஒவ்வொரு தடவையும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக தனியார் நிறுவனங்களிடமிருந்து ரூபா 1,562,400 பெறுமதியான விமானப் பயணச்சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2001 ஏப்ரல் 04 ஆந் திகதிய 91 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கை | சுற்றறிக்கைக்கு முரணாக விளையாட்டுத் துறை அமைச்சரின் தனிப்பட்ட உதவியாளராக கடமை புரிந்த உத்தியோகத்தரின் வெளிநாட்டு பிரயாணச் செலவினத்திற்காக ரூபா 750,297 தொகை விளையாட்டுக்கள் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. |

## 2.4 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின் போது விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் உடற்பயிற்சி நிலையத்தின் ரூபா 1,681,061 ஆன வருமானம் திறைசேரியின் அங்கீகாரமொன்று இல்லாமல் தேசிய விளையாட்டுக்கள் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 15,061,490 மிகையாக இருந்ததுடன், இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 12,468,672 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 27,530,162 ஆல் அதிகரித்திருந்தது. நிதி விளைவுகளின் அதிகரிப்பு தொடர்பில் தேசிய விளையாட்டு விழாச் செலவினம் மற்றும் நானாவிதக் கொடுப்பனவுகள் முறையே ரூபா 5,725,000 ஆலும் ரூபா 20,842,631 ஆலும் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலங்கையின் விளையாட்டுக்களுக்கு தைரியமூட்டுதல், அவற்றை முன்னேற்றுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் நிதியத்தின் முக்கிய நோக்கங்களாக இருந்த போதிலும், அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கூட்டிணைந்த திட்டமொன்றும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலத்திரனியல் புள்ளியிடல் பதாதையொன்று கொள்வனவு செய்வதற்காக சுகததாச தேசிய விளையாட்டு தொகுதி அதிகாரசபைக்கு வழங்குவதற்கு நிதியத்திற்குரிய ரூபா 3,000,000 ஆன நிலையான வைப்புக்கள் 2013 ஆகஸ்ட் மாதத்தில் எடுக்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபைக்கு வழங்காமல் நடைமுறை கணக்கில் வைத்துக்கொண்ட காரணத்தினால் நிதியத்திற்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த நிலையான வைப்பு வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 யூன் மாதத்தின் போது விளையாட்டு அமைச்சரால் ரூபா 15,000,000 தொகை ரூபா 5,000,000 வீதம் மூன்று நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 5,000,000 தொகையை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2,500 விளையாட்டுப் பொருட் தொகுதிகளை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு விளையாட்டு சங்க அங்கத்தவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக தென் மற்றும் வடமேல் மாகாண விளையாட்டு அமைச்சுகளுக்கு முறையே ரூபா 900,000 தொகை மற்றும் ரூபா 717,000 தொகை விளையாட்டுக்கள் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும், 10 விளையாட்டுப் பொருட் தொகுதிகளே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. மீண்டும் ரூபா 28,600 ஆன போக்குவரத்துச் செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டு 900 விளையாட்டுப் பொருட் தொகுதிகள் மாகாண அமைச்சுகளுக்கு போக்குவரத்துச் செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 1,617,000 ஆன செலவினம் மற்றும் ரூபா 125,000 தொகையான விழாச் செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தன.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 11.1 பிரிவின் பிரகாரம் வெளிநாடு செல்லும் போது சிக்கனமான வகுப்பில் பயணம் செய்ய வேண்டிய போதிலும் அதற்கு முரணாக வியாபார வகுப்பில் விமானச் சீட்டுக்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,800,700 செலவிடப்பட்டிருந்தது.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பந்தியின் மூலம் விளையாட்டு நிதியத்திலிருந்து பயன்படுத்தக்கூடிய நோக்கங்கள் குறிப்பாக கான்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக அமைச்சின் கட்டிட நிர்மாணத்திற்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ரூபா 35,000,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) சுகததாச தேசிய விளையாட்டு தொகுதி அதிகாரசபை மூலம் நிர்வகிக்கப்படும் போகம்பர விளையாட்டரங்கின் உடற்பயிற்சி நிலையத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த மூன்று மதியுரையாளர்கள், அமைச்சின் வரவேற்பாளர் உத்தியோகத்தர் பதவிக்கு தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்று இல்லாமல் அமைச்சிற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட பராமரிப்பு பொறியியலாளரின் சம்பளம் மற்றும் படிகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 591,437 தொகை தேசிய விளையாட்டு நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது தேசிய விளையாட்டு நிதியத்திலிருந்து விளையாட்டு செய்திப் பத்திரிகை கலைஞர்கள் மற்றும் தொலைக்காட்சி விளையாட்டு செய்தியாளர்கள் ஆகியோருக்காக ரூபா 1,065,000 செலவு செய்து 30 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஊடக நிறுவனங்களுக்கு ஒரு கணனி வீதம் வழங்குவதற்கு அமைச்சரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கையில் 05 ஊடக நிறுவனங்களுக்கு இரண்டு கணனிகள் வீதம் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொது நலவாய மாநாட்டின் ஆரம்ப வைபவத்தில் மற்றும் வியாபார மாநாடு ஒழுங்கமைப்பு என்பவற்றிற்கான செலவினங்களை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கையில் ஆரம்ப வைபவத்தின் போது விளம்பரப்படுத்தப்பட்ட BREAKAFAST EVENT நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அதற்குரிய ஏனைய உதவிச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு விளையாட்டுக்கள் நிதியத்திலிருந்து ரூபா 7,501,019 தொகையான கொடுப்பனவின் தேவைப்பாட்டை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. மேலும் குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் வெளிச்சம் வழங்குதல், காட்சிப்படுத்தல், ஒலிபெருக்கி என்பவற்றின் தேவைப்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,895,262 ஆன கட்டணம் அமைச்சு செயலாளரின் ஆலோசனையின்படி மதிப்பீடு செய்யும் போது அகற்றப்பட்டிருந்த போதிலும் அதற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் நடவடிக்கைகளின் கணக்காய்விற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன், விளையாட்டுத்துறை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரவின் மூலமும் நிதியத்தின் நடவடிக்கைகள் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சுச் செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதி முகாமைத்துவம்
(ஆ) கணக்கீடு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு